Regd No. 2975

ஸ்ரீ:

Released by Maran's Dog ,Toronto, Canada

# ஸ்ரீராமாநுஜன்-376

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர், மஹாவித்வான்

# SRI RAMANUJAN

EDITOR:

Mahamahimopadhyaya

P. B ANNANGARACHARYA, Kanchipuram-631503.

வருடசந்தா ரூ. 10 ஜீவித சந்தா ரூ 25

Released by Maran's Dog ,Toronto, Canada

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி *
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி — ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி *
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

சித்தார்த்தி ஸ்ரீ ஐப்பசி, கார்த்திகைமீ

Regd No. 2975

ஸ்ரீ:

# ஸ்ரீராமானுஜன்-376

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர், மஹாவித்வான்

# SRI RAMANUJAN

EDITOR:
Mahamahimopadhyaya
P. B ANNANGARACHARYA, Kanchipuram-631503.

வருடசந்தா ரூ. 10 ஜீவித சந்தா ரூ 25

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி ॥
தாழ்வாதுமில்குரவர் தாம்வாழி — ஏழ்பாரும்
உய்ய அவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி ॥
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

சித்தார்த்தி ௵ ஐப்பசி, கார்த்திகை மீ

# ஸ்ரீராமாநுஜன்-376

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான்: P. B. அண்ணங்கராசாரியர்

தொகுதி 32 | சித்தார்த்தி ளு ஐப்பசி மீ 1979 ளு நவம்பர் மீ | பகுதி 9


## "நீங்காத செல்வம் நிறைந்து"

### விநோத விருத்தாந்தம்.

சிலவாண்டுகட்குமுன்பு லக்ஷாதிகாரியான ஒரு ப்ராம்மண ஸ்ரீவைஷ்ணவரோடு எமக்கு மிக நெருங்கிய பரிசயமிருந்தது. அவர் உண்மையில் பல லக்ஷங்களுக்கு அதிகாரி சென்னையில் பல வீடுகள் மோட்டார் ஷெட்டுகள் உடையவர். பெரிய ஜமீன்தாருமாய் இருந்தார். பெரிய குடும்பியுமல்லர். அவர் தான தருமம் எதுவும் செய்வதில்லை. கோயில் கைங்கரியங்களுக்கென்று கேட்டாலும், உபநயனம் விவாஹம் என்று கேட்டாலும் ஒரு பைசாவும் கொடார்; அவருடைய ஸ்வபாவமறிந்தவர்கள் யாசகத்திற்கென்று அவரை அணுகவும் மாட்டார்கள். ஒரு நாள் அவரோடு ஸரஸமாகப் பேசிக் கொண்டிருக்கையில் அவரை நான் கேட்டேன். 'ஏன் தேவரீர் தான தருமங்கள் விசேஷமாகச் செய்வதில்லை?' -என்று. அதற்கு அப்பெரியார் சிரித்துக் கொண்டே கூறினா — " திருப்பாவைப் பாசுரத்திற்கு முரணாக நடந்து கொள்ள

விருப்பமில்லை" - என்று. அது என்ன பாசுரம்? என்றேன். 'உமக்குத் தெரியாததையா நான் சொல்லப் போகிறேன்; * நீங்காத செல்வம் நிறைந்து *

acharya.org

என்பதுதான் என்றார். இப்பாசுரத்திற்கு அவர் கொண்ட பொருள் உடனே எனக்குத் தோன்றி விட்டது; கையைவிட்டு நீங்காத - பெட்டியை விட்டு நீங்காத - தனரக்ஷக நிதி (Bank) களை விட்டு நீங்காத செல்வமாயிருந்தால்தான் எப்போதும் நிறைந்தேயிருக்கும்-என்று அவர் கொண்டிருந்த பொருள்.

சிலவாண்டு கட்கு முன்பு நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியையுங்கேளீர்: ஆயிரம் ரூபாய் நோட்டு வழங்கி வந்த காலத்தில் (ஏறக்குறைய முப்பதாண்டுகட்கு முன்பு) ஒரு மஹா நகரத்தில் தனிக குடும்பத்தில் ஒரு பெண்மணியிருந்தாள். அவள் இளமையில் கைம்பெண்ணானவள் கணவன் திரட்டின பணம் பதினாறு லக்ஷம் ரூபாய் — ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாகவே அவள் வைத்திருந்தாள் அவளுக்குச் சந்தானமும் கிடையாது, உற்றாருறவினரும் அதிகமாகக் கிடையார். நான்கு மாதங்களுக் கொருமுறை ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை யெடுத்து ஓர் உறவினரிடம் கொடுத்து மாற்றி வரச் சொல்லி அது கொண்டு குடும்ப நிர்வாஹம் செய்வளாம். இப்படி பலவாண்டுகளாக நடந்து வருவதாம் இம்முறையில் ஒரு நாள் ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை யெடுத்து வழக்கம்போல் கொடுத்து மாற்றி வரச் சொல்லுகையில், அவர் " ஐயையோ! உனக்குத் தெரியாதா? ஆயிரம் ரூபா நோட்டுகளெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டு இனி வழங்காதபடி செய்யப் பட்டு முடிந்து விட்டதே; இது உனக்குத் தெரியாதா? என்றாராம். உண்மையில் இது அவளுக்குத் தெரியவே தெரியாதாகையால் இதைக் கேட்ட வுடனே அவளுடைய பிராணன் படக்கென்று போய் விட்டதாம். பணத்திற்கு ஆட்கொல்லி யென்று ஒரு பெயருள்ளதாக நம் ஆசாரியர்களின் திவ்யக்ரந்தங் களில் காணக் கிடைக்கிறது.

மதுரையில் செந்தமிழ் என்றொரு மாதப் பத்திரிகை பல வாண்டுகள் சிறந்த வித்துவான்களால் நடத்தப் பட்டு வந்தது; ஏறக்குறைய முப்பது வருடங் களுக்கு முன்பு அதில் நன்றியில் திரு. என்றொரு அற்புதமான கட்டுரை வெளி வந்திருந்தது; அஃது அகவலாக இருந்தது;

" ஆரவருந்தலன் சேரவழங்கலன்
வைக விட்டிய பெய்கல வெறுக்கை
மாந்தி மகிழ்ச்சியும் ஈந்து புகழ்ச்சியும்
எய்தலுரிய பொய்யிற்கிழவோர் "

... .. --- ...

இப்படி நெடுகச் செல்லுமது; பணத்திற்கு இரண்டே உபயோகங்கள்; (மாந்தி மகிழ்ச்சியும் ஈந்து புகழ்ச்சியும்) தானும் தமரும் வயிறாரவுண்பது ஒன்று; தான தருமங்கள் செய்து புகழ் படைத்தல் ஒன்று; இவ்விரண்டு உபயோகங்கள் தவிர மூன்றாவது உபயோகம் பணத்திற்குக் கிடையாது. ஒவ்வொருவரும் ஆலோசித்துப் பார்க்கலாம். உதாரர்களாயுள்ள தனிகர்களைப் பற்றி நாம் பேசுவதொன்றில்லை; கிருபணர்களென்றும் லுப்தர்களென்றும் வழங்கப்படுகிற தனிகர்கள் தம்தமது விவேக சக்தியைப் பயன் படுத்திக் கொள்ளவேணும்.

acharya.org

# ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் ஒவ்வொன்று

## 1. ஆளவந்தார்-1

" தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம் பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே;
இதராவஸதேஷு மாஸ்ம பூத் அபி மே ஜந்ம சதுர்முகாத்மநா.

(கருத்து) எம்பெருமானே! தேவரீருடைய கைங்கர்யாநந்த நிரதர்களின் திரு மாளிகைகளில் அடியேன் க்ரிமிகீடங்களில் ஒன்றாகப் பிறக்கப்பெறினும் இனிதே; பிறருடைய மனைகளில் பிரமனாகப் பிறக்கப் பெறுவதும் இழுக்கே... ... ...

## 2 எம்பெருமானார் (கீதாபாஷ்யே 8-14)

' அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:.
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:"

" தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே;
மத்ப்ராப்த்யநுகுண-உபாஸநவிபாகம் தத்விரோதிநிர
ஸநம் அத்யர்த்தமத்ப்ரியத்வாதிகஞ்ச அஹமேவ ததா
மீத்யர்த்த: "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய" "இதி
ஹி ச்ரூயதே; வக்ஷ்யதே ச; ததாமி புத்தியோகம் தம் ... ..."

## 3 கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவம்-6

ஏஷ ஈச இதி நிர்ணயம் த்ரயீ பாகதேயரஹிதேஷு நோதிசேத்;
ஹஸ்திதாமநி ந நிர்ணயேத கோ தேவராஜமயமீச்வரஸ்த்விதி-

(கருத்து) பேரருளாளனுடைய பரத்வத்தை பாக்யசாலிகள் வேதத்தைக் கொண்டு அறுதியிடுவர்கள்; தௌர்ப்பாக்யசாலிகளான நமக்கு அது அரிதாயினும், ஸ்ரீஹஸ்திகிரியில் பேரருளாளனை ஸேவிக்கையாலே 'இவரே பரத்பரர்' என்கிற நிர்ணயம் யார்க்குத்தானுண்டாகாது?

## 4 பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவம் பூர்வசதகம்—7

லக்ஷ்மீகல்பலதோத்துங்கஸ்தநஸ்தபகசஞ்சல:.
ஸ்ரீரங்கராஜப்ருங்கோ மே ரமதாம் மாநஸாம்புஜே.

(கருத்து) "தூவியம்புள்ளுடைத் தெய்வவண்டு" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி ஸ்ரீரங்கராஜன் ஒருவண்டு; வண்டுக்கு சஞ்சரீகமென்று பெயராதலால் ஸ்ரீரங்கநாச்சியாராகிற கற்பகக்கொடியிலுள்ள திருமுலைத் தடங்களாகிற பூங்கொத்திலுங்கூட சஞ்சரீகமாகவேயிருக்கும்; அந்த ப்ரமரம் அடியேனுடைய ஹ்ருதயபுண்டரீகத்தில் சலியாமல் ரமித்திருக்கவேணும்.

acharya.org

**5. வேதாசார்ய பட்டர்** க்ஷமாஷோடசஸ்துதி — 9

*மத்பாபக்ஷபணாய யோஜயஸிசேத் கோரேண தண்டேந மாம்*
*ரங்காதீச்வர! கேவலாகஸாஞ்த் து:க்கம் மம ஸ்யாந்மஹத்.*
*தத்ரஷ்டுர் பவதோபி தாக்கமதுலம் கோரம் தயாலோ பவேத்*
*தஸ்மாத் தேபி ஸுகாய மத்க்ருதமிதம் ஸர்வம் த்வயா க்ஷம்யதாம்*

(கருத்து) ஸ்ரீரங்கநாதா! மஹாபாபியான அடியேனைத் தண்டிக்கப் பார்க்கில், அடியேன் வெறும் பாபங்களையே செய்திருப்பதால் அந்த தண்டனைகளினால் மிகவும் வருந்துவேன்; தயாளுவான நீயும் நான்படும் துக்கங்களைக்கண்டு மிகமிக துக்கிக்க நேரும். ஆகவே, அடியேனை தண்டியாமல் என்பிழைகளைப் பொறுத்தருளினால் நீயும் சுகப்படலாம் .. ... ... ... ...

**6. ஸ்ரீநிகமாந்தமஹாகுரு** (வரதராஜ பஞ்சாசத்)

*ஔதந்வதே மஹதி ஸத்மநி பாஸமாநே*
*ச்லாக்யே ச திவ்யஸதநே தமஸ: பரஸ்மிந்*
*அந்த:களேபரமிதம் ஸுஷிரம் ஸுஸூக்ஷ்மம்*
*ஜாதம் கரீச! கதம் ஆதரணாஸ்பதம் தே?*

(கருத்து) ஸ்ரீஹஸ்திகிரிநாதா! பரமயோக்யமான திருப்பாற்கடல் விளங்காநிற்கவும், தமோமண்டலத்துக்கப்பால் பேரின்பமான திருநாடு விளங்காநிற்கவும், அவ்விடங்களை உபேக்ஷித்து இந்த அழுக்குடம்பினுள்ளே நுண்ணிதானவொரு ஸுஷிரத்தில் விரும்பிவர்த்திப்பது என்னே?

**7. வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர்** — நரஸிம்ஹாஷ்டகம் -1.

*ஸ்ரீமதகலங்க பரிபூர்ணசசிகோடி ஸ்ரீதரமநோஹரஸடாபடலகாந்த!*
*பாலய க்ருபாலய! பவாம்புதிநிமக்நம் தைத்யவரகால! நரஸிம்ஹ நரஸிம்ஹ!*
(1)

(கருத்து) களங்கமற்ற பலவாயிரம் பூர்ண சந்திரர்கள்போல் அழகியவரே! ஸடாபடலங்களினால் மிகவழகியவரே! கருணைக்கடலே! அசுரர்வெங்கூற்றமே! நரசிங்கப் பெருமாளே! பிறவிக்கடலுள் அழுந்துமடியேனைக் காத்தருளவேணும்.

**8 மணவாள மாமுனிகள்** — யதிராஜவிம்சதி

*ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வயநித்யஸேவா*
*ப்ரேமாவிலாசயபராங்குசபாதபக்தம்,*
*காமாதிதோஷஹரம் ஆத்மபதாச்ரிதாநாம்*
*ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா.*

மாறனடிபணிந்து உய்ந்தவரும், அடிபணிந்தவர்களைக் குற்றங்களைந்து உய்விப்பவருமான எம்பெருமானாரை வணங்குகின்றேன். (தொடரும்)

acharya.org

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

# ஸ்ரீ காஞ்சீ நம்பிள்ளை மஹோத்ஸவ ப்ரகடனம் (ஸித்தார்த்தி ௵ 1979)

ஸ்ரீ காஞ்சீதேவப்பெருமாள் ஸந்நிதியின் திருமுன்பே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் **நம்பிள்ளைக்கு** நாளது கார்த்திகை மீ 8உ (24-11-79) சனிக்கிழமை உத்ராட நக்ஷத்திரத்தில் திருவவதார மஹோத்ஸவம் தொடக்கமாகி கார்த்திகை மீ 17. (3-12-79) திங்கட்கிழமை திருக்கார்த்திகைத் திருநக்ஷத்திரத்தில் சாற்றுமுறையாகும். பத்துநாட்களிலும் அலங்கார திருமஞ்சனமும் இரண்டு வேளைகளிலும் திவ்யப்ரபந்த ஸேவை கோஷ்டிகளும் ததியாராதனமும் விசேஷ வைபவமாக நடைபெறும். வித்வான்களின் உபந்யாஸங்களும் நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து அநுபவித்து ஆனந்திக்க வேணும். இம்மஹோத்ஸவ ஸேவார்த்தமாக வெளியூர்களிலிருந்து வரும் பக்த பாகவதோத்தமர்களுக்கு ஸ்தலவசதி முதலிய ஸௌகர்யங்கள் விசேஷமாகச் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீ வைஷ்ணவ பக்தசிகாமணிகள் குழாங்கூடியிருந்து அநுபவிக்கக் கூடிய மஹோத்ஸவமிது சாத்துமுறையன்று ஸ்ரீ யதோக்தகாரி எம்பெருமான் புறப்பாடு கண்டருளி நம்பிள்ளை ஸந்நிதியிலெழுந்தருளியிருந்து நடைபெறும்.

இரண்டாயிரம் ரூபாய் செலவில் நடைபெறும் இந்த மஹோத்ஸவத்திற்கு பக்தர்கள் உகந்து யதாசக்தி பொருளுதவி புரிந்து ஆசார்ய ஸார்வபௌமருடைய இம்மஹோத்ஸவத்தை மிகவும் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்

இங்ஙனம்,

சின்ன காஞ்சீபுரம்
15-11-79.

**P. B ANNANGARACHARYA,**
**Founder, Sri Nampillai Sannidhi.**

acharya.org

ஸ்ரீ:

## திருமண நிகழ்ச்சி

வடஆற்காடு ஜில்லா, திருவத்திபுரத்திற்கடுத்த களம்பூரில் வாழும் ஸ்ரீமான் ராமநாதன் செட்டியாருடைய புதல்வன் செல்வன் பரசுராமனுக்கும் சென்னை சிந்தாயலு ஸ்ரீமான் (லேட்) ராமசந்திர செட்டியாருடைய புதல்வி செல்வி லதாவுக்கும் 31—10—79ல் களம்பூரில் திருமணம் இனிது நடைபெற்றது ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் அருளாசி மணமக்களுக்குக் கிடைத்தது அவர்கள் தம் பெரியபேறு.

நல்ல பதத்தால் மனை வாழ்க! வாழ்க!!

# புத்தக வரவேற்பு

1. ஸ்ரீ மணவாள மாமுனிகள் தோத்திர திவ்ய ப்ரபந்தம்

தொகுத்து வெளியிட்டவர்: மாளிகைமேடு K. நாராயண ரெட்டியார்.
4. 8-வது குறுக்குத் தெரு C I T. காலனி,
மேற்கு ஷெனாய் நகர், சென்னை-30.

பரமாசார்யரும் சரமாசார்யருமான பொய்யிலாத மணவாள மாமுனிகளைப் பற்றிய தனி நூல்களையும் தனிப் பாடல்களையும் தொகுத்து வெளியிட்டு வைணவ வுலகுக்கு பேருதவி செய்துள்ளார் ஸ்ரீமான் K. நாராயண ரெட்டியார். மாமுனிகளைப் பற்றி முற்காலத்தோர் இயற்றிய பாடல்களுடன் நிகழ்காலக் கவிகளின் பாடல்களும் இந்நூலை அணி செய்கின்றன. பாராட்டிப் பயன் படுத்த வேண்டிய தொகுப்பு இது

விலை ரூ. 2-50 மேற்கண்ட விலாசத்தில் பெறலாம்.

2. இசை மணிக்கோவை விலை ரூ. 5-00

ஆசிரியர்: கானதகான ஸ்ரீமான் உ. வே R. பார்த்தசாரதி ஐயங்கார்
(ஸங்கீத ஸாஹித்ய வித்வான்)

கிடைக்குமிடங்கள்: D. ஸ்ரீநிவாஸன், 50, ஆழ்வார் பேட்டைத் தெரு, சென்னை- 8
K. வரதாசாரி. 6, ஆறுமுக செட்டி லேன், திருவல்லிக்கேணி, சென்னை-5.

அருளிச் செயலில் வல்லவரான ஸ்ரீமான் R. பார்த்தஸாரதி ஐயங்கார் எளிய இனிய கீர்த்தனைகள் இயற்றுவதிலும் சிறந்தவராய் விளங்குகிறார் என்பதற்கு "இசை மணிக்கோவை" ஒரு எடுத்துக்காட்டு. ஸ்ரீ ராஜகோபாலனைக் குறித்து அமைந்த பல பாடல்கள் உள்ளத்தைக் கவர்வனவாய் ஸங்கீத ரஸிகர்கட்கு அரிய விருந்தாய் இப்புத்தகத்தே உள்ளன. நாற்பது கீர்த்தனைகள் ஸ்வரதாளக் குறிப்புடனுள்ளன பத்து க்ருதிகளின் சுத்த ஸாஹித்யமும் உள்ளது. (அ. அ)

acharya.org

# க்ருஷ்ண யஜுர்வேத கதையொன்று.

தைத்திரீய ஸம்ஹிதையில் மூன்றாவது காண்டத்தில் முதல் ப்ரச்நத்தில் "மநு: புத்ரேப்யோ தாயம் வ்யபஜத்" என்று தொடங்கி ஓர் அற்புதமான கதை ஓதப்பட்டுள்ளது; அது வருமாறு;-மநுமஹர்ஷிக்குப் பலபல புத்திரர்களிருந்தனர். அவர்களுள் ஒருவனான நாபாநேதிஷ்டனென்பவன் ப்ரஹ்மவித்யை யோதுவதற்காக வெளியூர் சென்று குருகுலவாஸம் பண்ணிக்கொண்டிருந்தான். அந்தஸ்மயத்தில் மநுவானவர் தம்மோடு கூடவிருந்த புத்திரர்களுக்குப் பங்கு பிரித்து இட்டனர். நாபாநேதிஷ்டனுக்கு மட்டும் ஒன்றும் வைத்திலர். இச்செய்தியை யறிந்த அவன் குருகுலத்திலிருந்து தந்தையாரிடம் ஓடிவந்து, 'அப்பா! எனக்குமட்டும் நீர் ஏன் ஒன்றும் பங்குவைக்க வில்லை?' என்று ரோஷத்தோடு கேட்டனன். அதற்கு அவர் விடை கூறினர்—'பயலே! உனக்கு நான் பங்குவைக்காமலில்லை; அதோ பாராய், அங்கிரஸ்ஸுக்களென்பவர்கள் வேள்வி செய்கின்றனர்; ஸ்வர்க்க ப்ராபகமான மந்த்ரத்தை ஸமயத்தில் மறந்து திகைப்பர்கள்; அந்த மந்த்ரத்தை இதோ உனக்கு உபதேசிக்கிறேன்; அவ்விடத்திற்கு நீசென்றிருந்து ஸமயத்தில் இதை நீ அவர்களுக்கு உணர்த்துவாயாக; உணர்த்தினையாகில் அவர்கள் இஷ்டஸித்திபெற்று, வேள்வியில் சேஷித்தபொருள்களையெல்லாம் உனக்குக் கொடுத்துவிடுவார்கள். (அவை உனக்கு அக்ஷய்யமான பொருளாகும்)" என்றுரைத்தனர்; உடனே அவன் உபதேசம் பெற்று அங்குச்சென்றிருந்து ஸமயத்தில் தந்தை சொன்னபடியே ஸ்வர்க்கப்ராபகமான மந்த்ரத்தை அந்த அங்கிரஸ்ஸுக்களுக்கு நினைவூட்ட, அவர்களும் வேள்வியை முடித்துச் சுவர்க்கம்செல்லுகையில் யஜ்ஞசிஷ்டங்களான ஸம்பாரங்களை எல்லாம் இவனுக்குக் கொடுத்துவிட்டார்கள்: [அவற்றுக்கே பசுக்களென்று பெயர்.] நாபாநேதிஷ்டன் அவற்றையெல்லாம் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு புறப்படுகையில் ருத்ரன் ஓடிவந்து 'இவற்றை நீ கொண்டு போகக்கூடாது; இவையெல்லாம் எனக்குச் சேர்ந்தவை' என்று சொல்லித் தகைய, நாபாநேதிஷ்டன் - நான் கொள்ளையடிக்கவில்லை;


acharya.org

ப்ரீதர்களான அங்கிரஸ்ஸுக்கள் எனக்குக் கொடுக்கவேதான் இவற்றை நான் கொண்டுபோகிறேன்' என்று விடைகூற, அதுகேட்ட ருத்ரன் "அவர்களுக்குக் கொடுக்க அதிகாரமில்லை; நானே பசுபதி". என்று கூறித்தகைந்துவிட்டான். மேல்நடந்த செய்தி இருக்கட்டும்.

இவ்விடத்தில் ஒரு ஆராய்ச்சி;— ருத்ரன் பசுபதியாக வரம் பெற்றது எப்போது? என்று பார்ப்போம். அந்த தைத்திரீயஸம்ஹிதையிலேயே ஆருவது காண்டத்தில் இரண்டாவது ப்ரச்நத்தில் "தேஷாமஸுராணும் த்திஸ்ர: புர ஆஸந்" என்றுதொடங்கி த்ரிபுரஸம்ஹாரகதை ஓதப்பட்டுள்ளது; அந்த ஸந்தர்ப்பத்தில்தான் "ஸோப்ரவீத் வரம் வ்ருணை, அஹமேவ பசூநாம் அதிபதி ரஸாநீதி; தஸ்மாத் ருத்ர: பசூநாம் அதிபதி:" என்று ஓதப்பட்டிராநின்றது. நாபாநேதிஷ்டன் கதை மூன்ருவது காண்டத்திலுள்ளது; ருத்ரன் பசுபதியானது ஆருவது காண்டத்திலுள்ளது. இதனுல், வேதத்தில் வருங்கதைகள் ஆநுபூர்வியாக ஓதப்பட்டவையல்ல - என்று உணரலாகிறது. வேறு வகையான ஸமாதான முணர்த்த வல்லவர்கள் உணர்த்தவேணும்.

---

## ஒரு ஸுபாஷிதம் கேளீர்.

வாசாடோக்தௌ வாகம்ருதே வா ஸுகவீநாம்
ஸ்தோகப்ரஜ்ஞாஸ் துல்யத்ருசோ ஹந்த! பவந்தி.
கோமாயூநாம் கோகிலயூநாமபி சப்தேஷு
ஏகாகாரா மாநஸவ்ருத்திர் மஹிஷாணும்.

உலகில் பேசவல்லவர்களை நாம் பலவாருகக் காண்கிறோம்; கப்பலானது தண்ணீரில்தான் போகும்; ஆகாசத்திலோ தரையிலோ போகமாட்டாது; ஏரோப்ளான் ஆகாசத்தில்தான் போகும்; தண்ணீரிலோ தரையிலோ செல்லமாட்டாது; மாட்டு வண்டிகள் குதிரைவண்டிகள் ஸைகல்கள் மோடர்கள் தரையில்தான் போகும்; தண்ணீரிலோ ஆகாசத்திலோ போகமாட்டா. ரைல்வண்டிகள் தரையில்போனுலும் தண்டுவாளத்தின்மேல்தான் போகும்—என்றிப்படி ஓயாமல் பேசிக்கொண்டிருப்பர்கள். இவற்றுக்கு வாசாடோக்தி யென்று பெயர். சிலர் இத்தகைய வீண்வம்புப் பேச்சுக்களைச் சிறிதுமறியாமல் ச்ருதீதிஹாஸபுராண திவ்யப்ரபந்த ஸூக்திகளையே பொழிந்து "கேட்டறியா

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada



தன கேட்கின்றோம்" என்று பலரும் உகந்து கொண்டாடும்படி அம்ருத வர்ஷமாகப் பேசுவர்கள். இரண்டின் வாசியையுமறிந்து மகிழ வல்ல வர்கள் யாரோ சிலரேயாவர். மற்றையோர்களுக்கு எல்லாம் துல்ய மாகவே தோன்றும். இஃது எங்ஙனேயிராநின்ற தென்னில்; காட்டில் ஒருபுறம் நரிகள் ஊளையிடுகின்றன; மற்றொருபக்கம் குயில்கள் கூவு கின்றன. இரண்டொலிகளும் எருமைக்கடாக்களின் காதில் விழு கின்றன. ஏதேனும் வாசியறியுமோ அவை ? இதுபோலவேதான்.

[அரசாணிபாலை வேங்கடாத்வரியின் ஸுபாஷித கௌஸ்துபத் திலுள்ள சுலோகமிது.]

Released by Maran's Dog ,Toronto, Canada

## எம்பெருமானாரும்—திருக்கோட்டியூரும்.

* பஞ்சாசார்யபதாச்ரித: * [ஐந்து ஆசாரியர்களின் திருவடிகளை ஆச்ரயித்தவர்] என்று போற்றப்படுகின்ற ஸ்வாமி யெம்பெருமா னார்க்குத் திருக்கோட்டியூர் நம்பிகளும் ஒரு ஆசார்யர் என்பதை உலக மறியும். * கோஷ்டிபூர்ணகுருபஸத்திருசலோ யாம் சச்வதாஸேதிவாந் * என்று தொடங்கி பட்டர் அருளிச் செய்தபடியும், குருபரம்பராப்ரபாவம் முதலிய சரித்திர நூல்களில் உள்ளபடியும், ஸ்ரீ வசந பூஷண வியாக்கி யானம் முமுக்ஷுப்படி வியாக்கியானம் முதலியவற்றில் மணவாள மாமுனிகள் அருளிச்செய்தபடியும் ஸ்வாமி யெம்பெரும்மானார் திருக் கோட்டியூர்க்குப் பலகால் நடந்து நுவண்டு நிதியான பொருளைப் பெற்றிருந்தார் என்பது விவாதமற்ற விஷயம். அப்படி பெற்ற பொருளை உடனே ஆசார்ய நியமனத்தைக் கடந்து அவ்வூரிலேயே சில பல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு வாரி யிறைத்துவிட்டு எம்பெருமானா ரென்கிற சிறப்புப் பெயர் பெற்றார் என்பதும் தேசமெல்லாம் வழங்கும் இதிஹாஸமாகவுள்ளது. இது நிற்க. இங்கே ஓர் ஆராய்ச்சி; —

சாஸ்திரங்களில் ஒரு கட்டளையான வசனம் நம்பூருவாசாரியர் களால் ரஹஸ்ய க்ரந்தங்களில் அடிக்கடி கையாளப் பட்டிருக்கக் காண் கிறோம்; அதாவது—

Released by Maran's Dog ,Toronto, Canada

* குரும் ப்ரகாசயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத்,
அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ * என்பதாக

Released by Maran's Dog ,Toronto, Canada

acharya.org

இதன் பொருள் என்னென்னில்; விவேகியாயிருக்கும் சிஷ்யன் ஸ்வாசார்யனை நன்றாக வெளியிடக்கடவன்; ஆசார்யன் உபதேசித்த மந்த்ரத்தை மாத்திரம் அப்படி வெளியிடாமல் வெகு ஜாக்ரத்தையுடன் மறைத்து வைத்துக் கொள்ளக்கடவன். இப்படியல்லாமல் வேறு விதமாக நடந்து கொள்ளும் பக்ஷத்தில் (அதாவது) ஸ்வாசார்யனை ப்ரகாசப் படுத்தாமலிருக்கை, மந்தரத்தை மனம்போனபடி வெளியிட்டுவிடுகை ஆகிய இப்படிப்பட்ட விபரீத காரியங்களைச் செய்யும் பக்ஷத்தில் ஸம்பத்தும் ஆயுளும் குன்றும்-என்பது மேலே யெடுத்துக் காட்டிய ச்லோகத்தின் பொருள். இவ்விரண்டு வகையான குறைகளும் ஸ்வாமி யெம்பெருமானார் பக்கலிலே ஏறிக்கிடப்பதாகச் சங்கிக்க இடமுள்ளது, (1) தமக்கு ஆசாரியர்களாக அமைந்த ஐந்து பெரியார்களில் ஒருவர்க்கும் ஒரு தனியன்கூட ஸ்வாமி ஸாதிக்கவில்லை. தமக்கு நேரே ஆசார்யரல்லாத ஆளவந்தார்க்கே தனியனிட்டிருக்கிறார். ஆகவே. * குரும் ப்ரகாசயேத் தீமாந் * என்ற முதல் கட்டளை நிறைவேற்றப் படவில்லை யென்று தேறிற்று. (2) திருக்கோட்டியூரில் தாம் யதேஷ்டமாக நடத்தினதொரு செய்கையினால் * மந்த்ரம் யத்நேந கோபயேத் * என்கிற இரண்டாவது கட்டளையும் நிறைவேற்றப்படவில்லையென்று தேறிற்று. சிறந்த ஆசார்ய பதவியில் வீற்றிருந்து உலகம் போற்ற நின்ற இப்பேராசிரியர் பக்கலில் இவ்வகைக் குறைகள் இடம் பெறலாமா? என்று ப்ரதிபக்ஷிகளோ ஜிஜ்ஞாஸுக்களோ கேட்டால் என்ன விடையிறுப்பதென்று சிலர் சிந்திக்கின்றார்கள். அன்னவர்களுக்குத் தெளிவு பிறப்பிக்கவேண்டியே இந்த வியாஸம் எழுதப்படுகின்றது.

மேலே சங்கித்த இரண்டு குறைகளுக்கும் ஸ்வாமி பக்கலில் அவகாச லேசமும் இல்லையென்பது ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. இரண்டாவது விஷயத்திற்கு முன்னம் பரிஹாரம் தெரிவித்து, பின்னை முதல் விஷயத்திற்குப் பரிஹாரம் தெரிவிக்கிறோம். *மந்த்ரம் யத்நேந கோபயேத்* என்ற கட்டளைக்கு விபரீதமாகத் திருக்கோட்டியூரில் கோவில் கோபுரத்தின் மேலேறி வாரியிறைத்து விட்டார் என்று சிலரோ பலரோ நினைத்திருப்பதும் சொல்லுவதும் முறையல்ல. அங்கு நடந்த வ்ருத்தாந்தத்தின் உண்மை யாதெனில்; கேளீர். ஸ்வாமி முதன் முதலாகத் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினபோது அங்கு ஓரிடத்தில் நின்று "நம்பிதிருமாளிகை யெது?" என்று சிலரைக் கேட்க, அவர்கள்

acharya.org

"அதோ தெரிகிற கூரை" என்று அவருடைய திருமாளிகையைக் காட்ட, அங்கிருந்து அந்தத் திருமாளிகை வரையில் திருவடியால் நடந்து செல்லாமல் அங்கிருந்து தெண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டே [ப்ரணம பரம்பரைகளினாலேயே] நம்பி திருமாளிகையைச் சென்று சேர்ந்தார் ஸ்வாமி. இதைக் கண்ட அவ்வூரார்க்கு அப்போதுதான் நம்பியினுடையவைபவம் தெரியவந்தது. சதுச்சாஸ்த்ர வித்வத் ஸார்வ பௌமரான ஸ்வாமி இப்படி ஆதரிக்கும்படியான பெருமை வாய்ந்த மஹாநுபாவர் நீறுபூத்த நெருப்புப் போல மிகவும் ஏகாந்த சீலராகவே அவ்வூரில் எழுந்தருளியிருந்தார். ஸ்வாமியின் உபஸர்ப்பண விசேஷங்களினால் நம்பியினுடைய இப்படிப்பட்ட பெருமையை அவ் வூரார் அப்போதாகத் தெரிந்து கொண்டாலும் அவரை அவர்கள் அணுகிச் சென்று அர்த்த விசேஷங்கள் கேட்க அவகாச மில்லாம லிருந்தது. ஸ்வாமியே பல்கால் நடந்து துவண்டு கேட்க வேண்டி யிருந்ததென்றால், மற்றையோர்கள் கேட்பதற்கும் பெறுவதற்கும் ப்ரஸக்தியேது? அவர்கள் நம்பிபக்கலில் அணுகுவதற்கும் அவகாச மில்லாமலிருந்தது. ஸ்வாமி நம்பெருமாள் ஸன்னிதியிலிருந்து அடிக்கடி அவ்வூர்க்கு வருவதும் போவதுமாயிருந்தபடியாலே அவர் கள் விசாரித்து ஏதோ விசேஷார்த்தங்கள் பெறுவதற்கு ஸ்வாமி இங்ஙனே வருவதும் போவதுமாயிருக்கின்றார் என்பதைத் தெரிந்து கொண்டு ஒரு ஸமயத்தில் ஸ்வாமியிடத்திலே மிகவும் விநயமாக வணங்கி நின்று இங்ஙனே விஜ்ஞாபித்தார்கள்;—"ஸ்வாமிந்! நாங்கள் இவ்வூரிலேயே பிறந்து நம்பி திருமாளிகைக்கு ஸமீபத்திலேயே வர்த்தித்தாலுங்கூட தண்டேன். *நுகராமண்டூகம் தண்டாமரையினுடன் பிறந்தே என்றாப்போலே நம்பியிடத்துள்ள விசேஷங்களை க்ரஹிக்க சக்தியற்றவர்களாயிருக்கின்றோம்; தேவரீர் தாம் *வண்டே கானத்திடைப் பிறந்தும் வந்தே கமல மதுவுண்ணும்* என்றாப் போலே நெடுந்தூரத்திலிருந்து வந்தும் அந்த விசேஷங்களை க்ரஹிக்கும் பாக்கியமுடையீர்; இப்படி பலகால் துவண்டு நடந்துகொண்டிருக்கின்ற தேவரீர்க்கு அவசியம் நிதி கிடைத்தே தீரும்; அப்படி கிடைக்கும்போது அறிவிலிகளான அடியோங்களையும் சிறிது கடாக்ஷித்தருள வேணும்; *கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால்சோர* என்னும்படியான பெருமை வாய்ந்த தேவரீர் திருவுள்ளமிரங்கி எமக்கு அருள் செய்தாலொழிய வேறு விதமாக நாங்கள் அவ்வர்த்தங்களைக் கேட்டு உஜ்ஜீவிப்பதற்கு

acharya.org

ஈஷத்தும் இடமில்லை. நம்பிபக்கலில் நாங்கள் அணுகவோ பிரார்த்திக்கவோ பெறவோ ப்ரஸக்தியே யில்லாமையால் ஏழையரான வடியோங்களை ஸமயவிசேஷத்தில் திருவுள்ளத்தில் கொண்டிருந்து கடாக்ஷித்தருளவேணும்"—என்று.

இப்படி பலகால் வேண்டிக்கொண்டிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் ச்ரத்தாபக்தியதிசயங்களைத் திருவுள்ளம்பற்றியிருந்த ஸ்வாமி *பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்* என்று தாமே மற்றோரவதாரத்தில் பேசி வைக்கும்படியான பெருமை பொருந்தியவராதலால், அப்படிப்பட்ட ச்ரத்தாளுக்களான ஸ்ரீ வைஷ்ணவர்களை ஸன்னிதியின் மேல்தளத்திலே ஏகாந்தமாக அழைத்துச்சென்று அவர்களுக்குப் பரமக்ருபையுடன் உபதேசித்தருளினார். இப்படி யல்லாமல், அங்கே, மேல் கோபுரத்தருகே நின்றுகொண்டு வீதியில் போகிறவர்களை யெல்லாம் வம்மின் கொண்மின் என்றழைத்து அர்த்தங்களை வாரி யிறைத்து விட்டார் என்று சிலர் நினைப்பதும் சொல்லுவதும் வஸ்துஸ்திதியன்று. அப்படி வாரி யிறைத்திருந்தால் அதனால் யார்க்கும் யாதொரு பயனுமில்லை. ஏனென்னில்; *பத்ரேக்ஷிதோ வா வ்யர்த்தஸ் ஸ்யாத் யத்ருச்சாச்ருத ஏவ வா* என்பது ப்ரஸித்தமான சாஸ்த்ரம்; சிரமப்பட்டு ஆசார்ய ஸந்நிதியில் நிதியாகப்பெறவேண்டிய மஹார்த்தம் ஏடு பார்த்து க்ரஹிக்கப்பட்டாலும், அபேக்ஷையில்லாதிருக்க யாத்ருச்சிகமாகக் காதில் விழப்பெற்றாலும் அது பயனற்றதே-என்பது மேலே குறித்த வசனத்தின் பொருள். இதனை ஸ்வாமியறித்திலர் என்பது அஸம்பாவிதம். அறிந்துவைத்தும் கருணாதிசயத்தாலே தம்மை மறந்து வாரி யிறைத்துவிட்டாரென்னில், இப்படிச் சொல்லுகிறவர்கள் இதையொரு மஹாகுணமாக நினைக்கவேண்டுமேயொழிய, குறையாக நினைத்துச் சங்கிக்க இடமில்லை. உண்மையில் அங்ஙனம் நடந்ததில்லை. ச்ரத்தாளுக்களும் ப்ரார்த்தித்திருந்தவர்களுமான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே அருமருந்தாக உபதேசித்தருளப்பட்டது. *மந்த்ரம் யத்நேந கோபயேத்* என்பதற்கு-ஸர்வாத்மநா ஒருவர்க்குமே உபதேசிக்காமல் மூடி மூடியே வைத்துக்கொள்ளவேணும் என்பதாகப் பொருளென்று நினைப்பது பொருந்தாது. அப்போது உபதேச பரம்பரையே இல்லையாய்விடும். எந்த மந்த்ரமும் யாருக்குமே ப்ராப்தமாகாமலிருக்க நேரும். மற்ற ஆசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள்

என்றும், ஸ்வாமி யெம்பெருமானர் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்றும் சொல்வதற்குச் சாலவும் இடமுண்டு. நம்பியின் திருவாணையை மீறி யுபதேசித்தார் என்பது உண்டு. அந்தக் குற்றத்தை ஸ்வாமி தாமேயிசைந்து மறுமொழி கூறினது ப்ரஸித்தமாயிருப்பதால் அதில் இப்போது விசாரமொன்றுமில்லை. அநதிகாரிகளுக்கும் வாரி யிறைத்துவிட்டார் என்று கொண்டு கூறும் ஆக்ஷேபத்திற்கு இங்குப் பரிஹாரமுரைக்கப்பட்டது. "மனமுடையீரென்கிற ச்ரத்தையே அமைந்த மர்மஸ்பர்சிக்கு நானும் நமருமென்னும்படி ஸர்வரும் அதிகாரிகள்" என்கிற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படி அதிகாரிகளான ஸச்சிஷ்ய லக்ஷண பூர்த்தியுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே ஸ்வாமி உபதேசித்தருளினர் என்கிற பரமார்த்தத்தை நிரூபித்தோமாகிறோம்.

இனி, "குரும் ப்ரகாசயேத் தீமாந்" என்ற முதற் கட்டளை ஸ்வாமி பக்கலிலே கண்டதில்லையே யென்கிற சங்கைக்குப் பரிஹாரமுணர்த்துகிறோம். இதற்கு பஹிரங்க ஸமாதானமென்றும் அந்தரங்க ஸமாதானமென்றும் இரண்டுண்டு. இரண்டையும் தெரிவிக்கிறோம். பஹிரங்க ஸமாதானத்தை முன்னே தெரிவிக்கிறோம். "குரும் ப்ரகாசயேத் தீமாந்" என்ற கட்டளையை மற்றையாசிரியர்களெல்லாரும் எவ்விதமாகப் பரிபாலனம் செய்திருக்கிறார்களோ அவ்விதமாகவேதான் எம்பெருமானாரும் பரிபாலனம் செய்திருக்கிறார். ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான பூர்வாசார்யர்களும் தம் தம் ஆசிரியர்களுக்குத் தனியன் இயற்றி யநுஸந்திப்பது, காலக்ஷேப ப்ரஸங்கங்களில் அவ்வாசார்யர்களின் பெருமைகளைப் பன்னியுரைப்பது என்று இவ்விதமாகத் தானே நடந்து கொண்டார்கள். ஸ்வாமியும் அவ்விதமாகவே நடந்து கொண்டார். பெரியநம்பி முதலான தம் ஆசிரியர்களுக்கு இன்றைக்கும் வழங்கிவரும் தனியன்களெல்லாம் ஸ்வாமி பணித்தவையே. தம்முடைய வாழ்நாளில் அவ்வாசிரியர்களின் பெருமைகளை "போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றிவளர்ப்பதும்" செய்துகொண்டே யிருந்தாரென்பதில் என்ன ஸந்தேஹம்? வேறு எவ்விதமாக குரு ப்ரகாசநம் பண்ணுவது? பண்ணத்தகுந்த முறையில் பண்ணியேயிருக்கிறார்—என்கிறவிது பஹிரங்க ஸமாதானம். எல்லாரும் சொல்லிப் போருகின்ற ஸமாதானம் இதுவே.

இனி அந்தரங்கஸமாதானமாவது, கேண்மின். ஸ்வாமி தமக்கு ஸாக்ஷாத் ஆசார்யர்களான ஐவர்களில் ஒருவர்க்கும் தாம் தனியன்

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada


இட்டவில்லை, அந்தத் தனியன்களெல்லாம் வேறு சிலர் இட்டவையே என்றே வைத்துக்கொள்வோம். ஆளவந்தார் விஷயமாக ஸ்வாமி தனியனிட்டிருக்கிறாரென்பதில் ஸந்தேஹமோ விவாதமோ இல்லையே. *யத்பதாம்போருஹ த்யாந வித்வஸ்தாசேஷ கல்மஷ:, வஸ்துதாம் உபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம். 'என்கிற இந்தத் தனியன் கீதாபாஷ்யத்தின் தொடக்கத்தில் இருப்பதால் இது ஸ்வாமியின் ரசனையே யென்பது நிர்விவாதம். ஆளவந்தாருடைய திருவடிகளிரண்டைமாத்திரம் சிந்திப்பதாக இங்குக் கூறுகின்றதன்று. இங்குள்ள *பதாம்போருஹபதத்தினால் பதினான்கு திருவடிகள் உத்தேசிக்கப் படுகின்றன. அவை எவ்வையென்னில்; ஆளவந்தாருடைய இரண்டு திருவடிகள் தெரிந்தேயிருக்கின்றன. அவர் ஆதரித்த இரண்டு திருவடிகள் (நம்மாழ்வாருடைய திருவடிகள்); ஆக நான்கு. அவ்வாளவந்தாருடைய திருவடிகளை ஆச்ரயித்திருந்து தமக்கு ஆசாரியர்களான ஐவருடைய திருவடிகள் பத்து; ஆக இப்பதினான்கு திருவடிகளைச் சிந்திப்பதாகத் தெரிவிப்பது இந்த ச்லோகம். விவரித்துக் காட்டுகிறோம், காண்மின்.

Released by Maran's Dog ,Toronto, Canada

யஸ்ய பதாம்போருஹே—யத்பதாம்போருஹே என்று ஸமாஸம். (ஸம்பந்த ஸாமாந்யே ஷஷ்டீ என்று அறிக.) ஆளவந்தாருடைய திருமேனியிலுள்ள பாதாரவிந்தங்களைச் சொன்னபடி. மறுபடியும் 'யஸ்ய பதாம் — போருஹே' என்றால் — ஆளவந்தார்தாம் * மாதாபிதா யுவதய: * என்கிற ச்லோகத்தில் "ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா *என்று தம்முடைய சென்னிக்கு அணியாகப் பரிக்ரஹித்த நம்மாழ்வாருடைய உபயபாதங்களும் யத்பதாம்போருஹ சப்தத்தினாலேயே எளிதாகத் தெரிவிக்கப்படும். மீண்டும் 'யஸ்ய பதாம்போருஹாணி யத்பதாம்போருஹாணி" என்று கொள்க. உலகில் சிஷ்யர்களைத் திருவடிகளென்றே ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் வழங்குவராதலால் ஆளவந்தாருடைய ஐந்து சிஷ்யர்களையே ஆளவந்தாருடைய திருவடிகளாகச் சொன்னபடி. 'பதாம்போருஹ' என்பதில் இரண்டுபதங்கள் உள்ளனவன்றோ; (பத- என்றும், அம்போருஹ என்றும்). திருவடிக்கு வாசகமான பத சப்தத்தினால் அவருடைய சிஷ்யர்களைச் சொல்லி, தாமரைக்கு வாசகமான அம்போருஹ சப்தத்தினால் அவர்களுடைய திருவடிகளைச் சொல்லுகிறதென்றும் கொள்ளலாம். அம்போருஹமென்றால் திருவடிகளைச்

Released by Maran's Dog ,Toronto, Canada
acharya.org

சொல்லுமோவென்னில்; தாவி வையங்கொண்ட தடந் தாமரைகட்கே *(திருவாய்மொழி. 6-9-9.) என்கிற ஆழ்வார் ப்ரயோகத்தை யறிந்தவர்கள் இதில் விப்ரதிபத்தி பண்ணமாட்டார்கள். "தாவி வையங் கொண்ட தடந்தாளிணை" என்னவேண்டுமிடத்தில் திருவடிக்குப் பர்யாயமாகத் தாமரையையே சொல்லியிருப்பது காண்க. இந்த நடை வடமொழியிலுமுண்டு; அபஹ்நுதியலங்கார மென்பர்கள்.

ஆக, பரமாசார்யரான நம்மாழ்வாரையும் ப்ராசார்யரான ஆளவந்தாரையும் ஸ்வாசார்யர்களைவரையும் ப்ரகாசப்படுத்தியே தனியனிட்டிருக்குமழகு ஸஹ்ருதயைக ஹ்ருதயங்கமம். "குரும் ப்ரகாசயேத் சிஷ்ய:" என்னுமல் "குரும் ப்ரகாசயேத் தீமாந்" என்றுமூல ப்ரமாணத்தில் இருக்கையாலே மஹாமேதாவிகள் எவ்விதமாக ஆசார்ய ப்ரகாசநம் பண்ணலாமோ அவ்விதமாகவே ஸ்வாமி தாமும் தம்முடைய மேதா வைபவம் விளங்க இங்ஙனே ச்லோகரத்நம் தொடுத்திருப்பது மிகவற்புதம். மஹான்களுடைய திருநாவின் வீறு இங்ஙனேயன்றோ இருப்பது. இதுதான் அந்தரங்க ஸமாதான மென்பது.

இப்படி நுட்பமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்படி ஏதுக்கு ச்லோகமியற்றவேணும்? எல்லாரும் ஸுஸ்பஷ்டமாகவே நன்கு தெரிந்து கொள்ளும்படி யியற்றலாகாதோ வென்று கேட்பவர்கள் யாவஜ்ஜீவம் அப்படியே கேட்டுக்கொண்டிருக்கலாம். அன்னவர்கள், முந்துற முன்னம் வெளியிட்ட பஹிரங்கஸமாதாநத்தைக்கொண்டு த்ருப்தி பெறுக.

* யத்பதாம்போருஹேத்யாதியான மேற்குறித்த தனியனில் மற்றொரு விசேஷமும் நுட்பமாக உய்த்துணரத் தக்கதுண்டு; அதாவது —[பதாம்போருஹ] என்று ஐந்து எழுத்துக்களையிட்டு ஆளவந்தார் திருவடிகளை நிர்தேசித்திருப்பதானது ஆளவந்தாருடைய ஐந்து திருவடிகள் [அதாவது, ஐந்து சிஷ்யர்கள்] தம்முடைய சிந்தனைக்கு இலக்கானவர்களென்றும் தெரிவிக்கப்பட்டதாகிறது. அது தன்னிலும் முதலிலே பகாரத்தையிட்டிருப்பதானது அந்த ஐந்து ஆசாரியர்களுள் தலைமையாசிரியரே தமக்குத் தலைவரான ஆசார்யராக வாய்த்தார் என்பதற்கு ஸூசகமாகிறது. எங்ஙனே யென்னில்; ஸ்வாமிக்குத் தலைமையாசிரியர் பெரிய நம்பி; அவருடைய நிஜநாமதேயம் பராங்குச



acharya.org

தாஸர் என்பது, வாக்ய குருபரம்பரையில் "ஸ்ரீமதே ராமாநுஜாய நம:, ஸ்ரீமத்யாமுநமுநயே நம:" என்றவாக்யங்களுக்கிடையில் "ஸ்ரீபராங்குச தாஸாய நம:" என்றிருப்பது கொண்டும் பெரியநம்பியினுடைய திருநாமம் பராங்குச தாஸரென்பதே யென்றறியலாம். பதாம்போருஹ என்றதில் முதலிலுள்ள பகாரம் பராங்குச தாஸராகிற தம் முதலாசிரியரை ப்ரத்யபிஜ்ஞாபநம் பண்ணவல்லது என்றுணர்க. இதற்குமேல் ஒன்று கேட்கக்கூடும்; முதலெழுத்தினால் பெரியநம்பி ஸூசிதராகிறரென்னில், மற்றை நான்கெழுத்துக்களினாலும் நான்கு ஆசார்யர்கள் ஸூசிதர்களாகிறபடியையும் காட்டவேண்டாவோ? என்று. கேண்மின்; தலைவரான ஆசிரியரைக் காட்டுமளவே போதுமானது. ஒவ்வோராசிரியரையும் இங்ஙனே காட்டியாகவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. மஹாவிவேகிகளான சதுரர்கள் இன்னமும் உட்புகுந்து ஆராய்ந்து பார்த்தால் அந்த வழியும் புலப்படக்கூடும். .... .... ❀

## "ஆத்மதா பலதா:."

நம் பூர்வாசார்யர்கள் திவ்யப்ரபந்த வியாக்யானம் முதலிய ஸம்ப்ரதாயக்ரந்தங்களில் ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராண பாஞ்சராத்ரங்கள் முதலான பல பல ப்ரமாணங்களையும் உதாஹரித்தருளியுள்ளார்களென்பது யாவருமறிந்ததே. அந்த ப்ரமாணங்களில் சிலவற்றை கற்றுணர்ந்த பெரியார்களுங்கூட முறைவழுவாக அச்சிட்டுவிட்டபடியால் அவற்றைப் பின்புள்ள வித்வான்களும் விசேஷவிமர்சமின்றிக்கே அந்த அச்சுப்பிழைகளை அகற்றுமலே அப்படியே அநுஸந்தானம் செய்துவருவது ஒரு ரூடியாக ஆய்விட்டது. "அர்ச்சாவதாரோபாதாந் வைஷ்ணவோத்பத்தி சிந்தநம், மாத்ருயோநிபரீக்ஷாயாஸ் துல்யமாஹுர் மநீஷிண:* என்கிற ப்ரமாண வசநத்தை ஸ்ரீ வசநபூஷண வ்யாக்யாநாதிகளில் "அர்ச்சாவதாரோபாதாநம்" என்று தனிப்பதமாகப் பிரித்து யாரோ சிலர் அச்சிட்டு விட்டார்கள்; அப்படித் தனிப்பதமாகப் பிரித்தால் என்ன அர்த்தம் ஆகும் என்பதைக்கூட விமர்சியாமல் வித்வான்களுங்கூட (சிலர்) நாளைக்கும் அப்படியே வ்யவஹரித்து வருகிறார்கள். அவ்விதமான வழுக்களில் ப்ரக்ருதம் ஒரு பெரிய வழுவை யெடுத்துக்காட்டித் திருத்தம் உணர்த்த விரும்புகிறோம்.

*ஆத்மதா பலதா:* என்கிற ப்ரமாணவாக்யம் காலக்ஷேபரஸிகர்களான ஸ்வாமிகள் யாவர்க்கும் தெரிந்ததே. இதை நம் ஆசாரியர்கள்

acharya.org

திவ்யப்ரபந்த வியாக்யானங்களில் கையாண்டிருக்கிறார்கள். இது எவ்விடத்து ப்ரமாணம்? இதன் உண்மையான வடிவம் எப்படிப்பட்டது? என்று விமர்சியாமலே "ஆத்மதா பலதா" என்றே சொல்லி ஸபைகளில் உபந்யாஸங்களும் செய்து வருகிறார்கள். எம்பெருமான் அடியார்களுக்குத் தன்னை அநுபவிக்கலாம்படி கொடுத்து, அநுபவிக்கைக் குறுப்பான வலிமையையும் கொடுத்தருளுகிறான் என்கிற விவக்ஷையில் இந்த ப்ரமாணம் கையாளப்பட்டு வருகிறது. ஆத்மதா என்றும் பலதா என்றும் ஆகாராந்தமாகச் சொன்னால் இந்தச் சொல் பகவானிடத்தில் எப்படி அந்வயிக்கும்? ஆத்மதா என்றால் அது ஸ்த்ரீ லிங்கச்சொல்வடிவமாகத் தோன்றவில்லையா? புருஷோத்தமனை இப்படிச் சொல்லவேண்டிய அவசியமென்ன? என்று ஆராய வேண்டியது பண்டிதர்களின் கடமை. இந்த ப்ரமாணத்தைப் பரம்பரையாய் இப்படியே பலரும் சொல்லிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருகிறார்களாதலால் ஏதோ அவிசாரிதரமணீயமாக வந்துகொண்டிருக்கின்றதென்றே சொல்லியாகவேண்டும்.

இந்த ப்ரமாணமானது அத்யயனம் பண்ணப்பட்டுவருகிற க்ருஷ்ணயஜுர்வேதத்திலுள்ளது. நாலாவது காண்டம் முதல் ப்ரச்நத்திலும் ஏழாவது காண்டம் ஐந்தாவது ப்ரச்நத்திலுமாக இருமுறை ஓதப்பட்டு வருகிறது இந்த வாக்யம்.

* ய ஆத்மதா பலதா யஸ்ய விச்வ உபாஸதே ப்ரசிஷம் யஸ்ய தேவா:, யஸ்யச் சாயாம்ருதம் யஸ்ய ம்ருத்யு: கஸ்மை தேவாய ஹவிஷாவிதேம* என்பது பரிபூர்ணமானருக்கு. இதற்கு அநாதியான பதபாடமும் ஓதப்பட்டு வருகிறது. ஆத்மதாஇத்யாத்ம—தா: என்று விஸர்க்காந்தமாகவே ஆஸேதுஹிமாசலம் ஸமகண்டமாக ஓதப்பட்டு வருகின்றது. இதில் எவ்விதமான பாடபேதமும் கிடையாது. ஆத்மாவை [தன்னை]க் கொடுப்பவன்—ஆத்மதா:, பலத்தைக் கொடுப்பவன்—பலதா:. முடிவில் விஸர்க்க மிருந்தால் பஹுவசநமாக ஆய்விடுமேயென்று சிலர் மயங்கியே விஸர்க்கத்தையொழித்து ஆத்மதா என்றும் பலதா என்றும் அவிஸர்க்கமாகச் சொல்லுவது. அந்த மயக்கம் வேண்டா; தெளியும் வழி காட்டுகிறோம். ஆயுர்த்தா:, வர்ச்சோதா:, வரிவோதா:, ப்ராணதா:, அபாநதா:, வ்யாநதா:, சக்ஷுர்த்தா: என்று இப்படி பல பல பதங்கள் ப்ரதமாவிபக்தியின் ஏகவசநத்தில் வருவன. ஆதோமநிந் க்வநிப்வநிபச்ச (அஷ்டாத்யாயீ. 3-2-74) என்கிற ஸூத்ரத்தினால் விச் வந்து

ஆத்மதா: என்றும் பலதா: என்றும் ஸவிஸர்க்கமாக நிஷ்பந்நமாகிற தென்று உணரவேணும். த்விதீயாபஹுவசநத்தில்தான் ஆத்மத: என்றும் பலத: என்றும் வரும். சப்தமஞ்ஜரியில் விச்வபா: என்று காட்டியிருப்பதையும் ஸ்மரிப்பது.

ஆகவே, சில பதிப்புகளில் ஆத்மதா பலதா என்று அவிஸர்க்கமாகக்கண்டாலும் ப்ராமாணிகர்களும் நிர்மத்ஸரர்களுமான பண்டிதர்கள் விஸர்க்கமிட்டுத் திருத்திக்கொள்ளவேணுமென்று ஸவிநயம் விஜ்ஞாபித்து நிற்கிறோம்.

---

# மார்கழித் திங்கள் ஸம்பிப்பதால்

வஸுதேவதேவகிகளையும் நந்தகோபயசோதைகளையும்பற்றிக் கேண்மின்.

வஸுதேவதேவகிகள் கண்ணபிரானை மகனாகப் பெறப்பெற்ற பாக்யசாலிகளே யானாலும அவனது திவ்யாத்புத சேஷ்டிதங்களில் ஏகதேசமும் அநுபவிக்கப்பெற்றவர்களல்லர். "பிள்ளைசெய்வனகாணாத் தெய்வத் தேவகி புலம்பிய புலம்பலைக் குலசேகராழ்வார் கல்லுங் கரையப் பேசியுள்ளார். நந்தகோபயசோதைகளின் பாக்கியத்தைப் பெரியாழ்வார் பரக்கப் பேசியுள்ளார்.

1. என்வாயிடை நிறையத் தாலொலித்திடும் திருவினையில்லாத் தாயரில் கடையாயின தாயே.
2. ஆனையிற்கிடந்த கிடக்கை கண்டிடப்பெற்றிலே னந்தோ! கேசவா கெடுவேன் கெடுவேனே.
3. நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே.
4. அளவில் பிள்ளைமை யின்பத்தை யிழந்த பாவியேன் எனதாவி நில்லாதே.
5. திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே.
6. வண்ணச் செஞ்சிறு கைவிரலனைத்தும் வாரிவாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில் உண்ணப் பெற்றிலேன் ஓ கொடுவினையேன்!

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada


7. வாயிலே முலையிருக்க என் முகத்தே யெழில்கொள் நின் திருக் கண்ணிணை நோக்கந் தன்னையுமிழந்தே னிழந்தேனே.

8. அழுகையு மஞ்சிநோக்கு மந்நோக்கும் அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதும் தொழுகையுமிவை கண்டவசோதை தொல்லையின்பத்திறுதி கண்டாளே.

9. வென்றிசேர் பிள்ளை நல்விளையாட்டமனைத்திலும் அங்கென் னுள்ளமுள் குளிர ஒன்றுங் கண்டிடப் பெற்றிலேனடியேன்!

என்றிங்ஙனேயாயிற்றுத் தேவகி புலம்பல்; இது வஸுதேவருடைய புலம்பலுக்கும் உபலக்ஷணம். இனி நந்தகோப யசோதைகளின் பாக்கிய பரிபாகப்ரணாளிகளை என் சொல்லுவது? ஒரு மஹாகவி நந்த கோபரைப்பற்றிக் கூறினர்—

Released by Maran's Dog ,Toronto, Canada

"ச்ருதிமபரே ஸ்ம்ருதிமபரே பாரதமபரே பஜந்து பவபீதா:,
அஹமிஹ நந்தம் வந்தே யஸ்யாளிந்தே பரம் ப்ரஹ்ம."

என்றார். ச்ருதிகளோ ஸ்மிருதிகளோ பாரதமோ பாகவதமோ எது வும் எனக்கு வேண்டா. நந்தகோபனொருவனையே தஞ்சமாகப் பற்று வன் நான்; அவன் றனக்கு வந்த ஏற்றமென்னெனில்; [பரம் ப்ரஹ்ம யஸ்ய அளிந்தே] கண்டுஷம் செய்கிற வாசல் திராங்கிக்கு அளிந்த மென்று பெயர். நந்தகோபனுடைய, மனைவாசல் திராங்கியிலன்றோ பரமபுருஷன் தவழ்ந்து விளையாடிப் புரண்டுகிடந்தான். இந்த பாக் கியம் வேறுயார்க்குண்டு?

Released by Maran's Dog ,Toronto, Canada

நம்மாழ்வார் நந்தகோபனை நிதியெடுத்தவனென்கிறார், "எடுத்த பேராளன் நந்தகோபன்றன் இன்னுயிர்க் சிறுவனே!" என்றன்றோ கண்ணனை விளிக்கின்றாராழ்வார். உண்மையில் நந்த கோபனுக்குக் கண்ணபிரான் கிடைத்தது ஜன்ம தரித்ரனுக்கு நவநிதி கிடைத்தது போலவேயன்றோ? அவனுக்குக் கண்ணன் கிடைத்தன னென்பது மட்டுமேயோ? அவனைத் தன்னிஷ்டப்படி நியமிக்கும் பாக்கியமன்றோ பெற்றிருந்தான். ஒரு நாள் மாலைப் பொழுதில் கண்ணன் தெருவிலே சென்று நின்றான்; அப்போது யசோதை கண்ணனை நோக்கி "வானிடைத் தெய்வங்கள் காண அந்தியம்போது அங்கு நில்லேல் ஆழியங் கையனே! வாராய்" என்று உள்ளே வருமாறு அழைத்தாள். அவனோ விளையாட்டில் பராக்காலே வந்திலன்; அப்

Released by Maran's Dog ,Toronto, Canada
acharya.org

போது சொல்லுகிருளவள்—"உந்த மடிகள் முனிவர் உன்னை நான் என் கையில் கோலால், நொந்திட மோதவுங் கில்லேன்" என்று பயலே! இப்படி நீ துருதுருக்கையாய் வர்த்திப்பதை உன் ஸ்வாமி கண்டால் உன்னை வெறுமனே விடுவரா? சீறிச் சிவந்து பொடிந்து நிற்பரே, நானும் உன்னையடிக்கக் கோலிக் கையில் கோலை யெடுக்கிறேன், ஆனாலும் என குழகனே அழகனே! உன்னையடிக்கக் கைவரவில்லையே என்கிருள். கண்ணனை ஸர்வஸ்வாமியென்று தெரிந்துகொண்டிருந்துமிவள் அவனுக்கும் ஸ்வாமியாக நந்தகோபனை வைத்து "உந்தமடிகள்" என்று சொன்ன அழகு என்னே! ஆண்டாளும்* நாயகனாய் நின்ற நந்தகோபனென்கிருள்.

### ஒருதலையில் இழவும் ஒருதலையில் பேறுமானவிதற்கு ஹேது.

வஸுதேவதேவகிகள் பெற்றும் பேறிழந்தது ஏன்? நந்தகோபரும் யசோதையும் அசிந்திதமாக நிகரில்லாப்பேறு பெற்றது ஏன்? என்று சிந்திப்பார்க்குச் சொல்லுகிருேம். வஸுதேவ தேவகிகள் நெடுங்காலம் தவம் புரிந்தனர் எம்பெருமானே எமக்குப் புதல்வனுகப் பிறக்கவேணுமென்று பல்லாண்டு கிடந்து நோன்பு நோற்றனர். இத்தகைய ஸாதநாநுஷ்டானத்தை எம்பெருமான் ஸஹிக்குமவனல்லன். தனது நிர்ஹேதுகக்ருபைக்கு வெற்றியையன்றே அவன் விரும்புவான். சில விடங்களில் அல்பவ்யாஜமாத்திரத்தை எதிர்பார்ப்பதுமுண்டு! மிகக்கனத்த ஸாதநாநுஷ்டானம் காணுமிடத்து அவத்யம் காட்டி நிற்பது அவன் செயல். வஸுதேவருடைய தீவிரமான ஸாதநாநுஷ்டானம் கண்ணபிரானுடைய திருமுகத்திலே விழிக்குமளவுக்கு உதவிற்று அவனது தவம் அவ்வளவிலே உபக்ஷீணமாயிற்றென்க. "இருகரையுமழிக்கும் க்ருபாப்ரவாஹ முடையவன்" என்று ப்ரஸித்தனான பெருமான் அந்த அருள் வெள்ளத்தை உடனே திருவாய்ப்பாடியில் மடைமாறினன். "நிர்ஹேதுக க்ருபையின் பிரபாவம் இங்ஙனேயாயிற்று இருப்பது!" என்று காட்டினது திருவாய்ப்பாடியிலே.

### இவ்வர்த்தத்தில் வேதபுருஷனுடைய ஸம்வாதம்

வேதம் ஓதுகின்றது—"அந்நவான் அந்நாதோ பவதி" என்று. "அந்நவாந் பவதி" என்ருலே போதுமே; 'அந்நாதோபவதி' என்றும் தனிப்பட ஓதவேணுமோ? அன்னம் கிடைக்கப் பெற்றவன் அந்நவான்.

acharya.org

அவன் தனக்குக் கிடைத்த அன்னத்தைப் புஜிக்கமாட்டானே? அதைப் புஜிப்பவனாகவுமாகிருனென்று தனிப்படச் சொல்லுவது எதற்காக? என்று சங்கிக்க நேரும். இந்த சங்கையைப் பரிஹரிக்கவே வஸுதேவரும் நந்தகோபரும் தோன்றினர். *அந்நவாந் பவதிக்கு வஸுதேவர் இலக்காய் நின்றார். *அந்நாதோ பவதிக்கு நந்தகோபர் இலக்காய் நின்றார். *அந்நம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத் என்ற சுருதியின்படி அன்னமாகிய பரப்ரஹ்மத்தை வஸுதேவர் வெறுமனே பெற்றாரேயல்லது புஜிக்கப் பெற்றிலர்; அது பெற்றவர் நந்தகோபரே யாயினர். இவற்றுக்கு ஹேது, ஒரு தலையில் ஸாதநாநுஷ்டாநப்ராவண்யமும் மற்றொரு தலையில் அஃதில்லாமையுமேயாம். ஸாதநாநுஷ்டானம் செய்யுமாறு சாஸ்த்ரமே விதித்திருக்க அதனைப் பொல்லாங்காகக் கருதுவது கூடுமோ எனின்; எம்பெருமானைப் பெறுதற்கு ஸாதனானுஷ்டானம் சாஸ்திர ஸம்மதமன்று. * நாஸௌ புருஷகாரேண நசாபி அந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந* என்று பகவான் சொல்லி வைத்திருக்கின்றான். காலவிசேஷத்திலே ஒரு அதிகாரி விசேஷத்தைத் தானே தன் இச்சையேயடியாகக் கடாக்ஷிப்பதாகக் கூறியிருப்பதொன்றே வெற்றிபெறும். "கோஸலகோகுல சராசரம் செய்யுங் குண மொன்றின்றியே அற்புதமென்னக் கண்டோம்" என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணையின் வியாக்கியானம் ஸேவித்துத் தெளிவது.

## கண்ணபிரானுடைய சேஷ்டித போக்யதை

திருவயோத்தியில் திருவவதரித்த இராமபிரானுடைய சரிதையைப் பன்னிரண்டு பிராயமளவும் ஒன்றுமறியப் பெறுகின்றிலோம். விச்வாமித்திர முனிவனது வேள்விகாத்தது முதலாகவே இராமபிரானது சரிதை ஆரம்பமாகின்றது. அப்போது இராமனுக்குப் பன்னிரண்டு வயது. அதற்கு முந்தினசரிதைகள் தெரியவருகின்றில; கண்ணபிரானுடைய சரிதைகள் பிறந்தவன்றே தொடங்கி அபரிமிதங்கள். அதிலும் பன்னிரண்டு பிராயமளவும் பேரின்பமும் இன்சுவையும் வடிவெடுத்த சரிதைகள். பிராயம் முதிர்ந்த பிறகு செய்தருளின கீதோபதேசம், பாரதயுத்த நிர்வஹணம் முதலான பெருஞ்செயல்கள் கிடக்க. நம் ஆழ்வார்களின் ஈரச்சொற்களை அப்ரமேயமாக விளைவித்தவை கண்ணபிரானுடைய சிறுச் சேவகங்களே யன்றோ. கண்ணபிரானுடைய திவ்யசேஷ்டிதங்கள் இத்தனை அற்புதமாக அமைந்தில

acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada


வென்றால் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் இத்தனையழகு பெற்றிருக்க விரகில்லையே. ஆண்டாள் தன்னுடைய திருப்பாவைக்குக் கண்ணபிரானுடைய கதைகளை இலக்காகக் கொண்டில ளென்றால் "கோதை தமிழ் ஐயைந்துமைந்து மறியாத மானிடரைவையஞ் சுமப்பதும் வம்பு" என்னும்படியான ஏற்றம் அதற்கு ஏற்றிராதே.

## கண்ணபிரானும் பலராமனும்

கண்ணபிரானுடைய திவ்ய சேஷ்டிதங்கள் இவ்வளவு ரஸ்யமாக அமைந்ததற்குக் காரணம் நம்பிமூத்தபிரானோடு [ஸ்ரீ பலராமனோடு] சேர்க்கையே யென்று வேதாந்தவாசிரியர் திருவுள்ளம்பற்றுகின்றார். அவர் தசாவதார ஸ்தோத்ரத்தில் பலராமஸ்துதி பத்யத்தில்

"க்ஷீரம் சர்க்கரயேவ யாபிரப்ருதக்பூதா: ப்ரபூதைர் குணை:,
ஆகௌமாரகமஸ்வதந்த ஜகதே க்ருஷ்ணஸ்ய தா: கேலய:"

Released by Maran's Dog ,Toronto, Canada

என்று பணித்தது காண்க. கண்ணபிரானோடு பலராமன் கூடியிருந்திலனாகில் கண்ணபிரானுக்கு அபாயங்கள் அபரிஹார்யமாகுமென்று பட்டர் திருவுள்ளம் பற்றுகிறார். ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் பலராம ஸ்துதி பத்யத்தில், "யத்விச்லேஷலவோபி காலியபுவே கோலாஹலாயாபவத்" என்றருளிச் செய்தது காண்க.

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் காளியமர்த்தநம் சொல்லத்தொடங்கிய பராசர பகவான "ஏகதா து விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தா வநம் யயௌ" என்றார். கண்ணபிரான் நாடோறும் பலராமனோடு கூடவே விருந்தாவனம் செல்வது வழக்கம்; ஒரு நாள் அவனை விட்டுத் தனியே சென்றான். அன்று தான் காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டது. "தமையன் ஒரு நாள் பேரநிற்க, தம்பி பாம்பின் வாயிலே புகும்படியாயிற்று" என்பது பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி. இதையே காட்டுவது மேலே யுதாஹரித்த பட்டர் ஸ்ரீஸூக்தி.

Released by Maran's Dog ,Toronto, Canada

நம்பிமூத்தபிரான் ஆதிசேஷாம்சமாகையாலே வெண்ணிறத்தன்: கண்ணபிரானோ "கண்ணனென்னுங் கருந்தெய்வம்" என்று ப்ரஸித்தன். திருவாய்ப் பாடியில் இவ்விருவரும் முன்னும் பின்னுமாக நடந்து செல்லுமழகு, வெள்ளிமலைக் குட்டியொன்று முன்னே செல்ல, நீலமணி மலைக்குட்டியொன்று அதன் பின்னே செல்லுகின்றதோ! என்றெண்ணலாம்படி யிருந்ததாம். பெரியாழ்வார் திருமொழி (1–7–5)

Released by Maran's Dog ,Toronto, Canada